www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

SMS

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2024

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5×1=5

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே –
   அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. தமிழினத்தை ஒன்றுப்படுத்தும் இலக்கியமாக மா.பொ.சி கருதியது ----
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
3. 'வீட்டைத் துடைத்துசாயம் அடித்தல்' – இவ்வடிகள் குறிப்பிடுவது ---
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
4. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது_____
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
5. வாய்மையே மழைநீராக – இத்தொடரில் வெளிப்படும் அணி___
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

ஆ. பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. 4×1=4

பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

6. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் ______
   அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
   இ) கம்பராமாயணம் ஆ) திருவிளையாடற்புராணம்
7. பாடலில் உள்ள மோனைச் சொற்கள்
   அ) பகர்வனர் – நகரவீதியும் ஆ) பட்டினும் – நூலினும்
   இ) பகர்வனர் – பட்டினும் ஈ) தூசும் – அகிலும்
8. காருகர் – என்பதன் பொருள்
   அ) வெற்றிலைவிற்போர் ஆ) எண்ணெய் விற்போர் இ) நெய்பவர் ஈ) ஓவியர்
9. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருட்கள்____
   அ) பட்டு, பருத்தி ஆ) நுண்வினை, கட்டு இ) தூசும், துகிரும் ஈ) ஆரமும் அகிலும்

இ. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க. 7×2=14

10. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
11. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
12. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

13. குறிப்பு வரைக:- அவையம்
14. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
15. "காய்மணியாகு முன்னர்க்காய்ந் தெனக்காய்ந்தேன் " – உவமை உணர்த்தும் கருத்து யாது?
16. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
17. மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) மனக்கோட்டை ஆ) ஆறப்போடுதல்
18. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) உதகமண்டலம் ஆ) சைதாப்பேட்டை
19. கலைச்சொல் அறிக : அ) Patent ஆ) Renaissance

ஈ. மனப்பாடப் பகுதி 1×4=4

20. "நவமணி" எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்

உ. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி : 2×3=6

21. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப்பொருள் விளக்குக.
22. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதைப் பற்றி எழுதுக.
23. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது " – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

ஊ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி : 2×5=10

24. ஜெயகாந்தன் கதை மாந்தரின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்ரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக எவ்வாறு கூறுகிறார்?
25. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



எ) ஏதேனும் ஒன்றனுக்கு விரிவாக விடையளி. 1×7=7

27. அ) கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. ( அல்லது )
ஆ) நாட்டுவிழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் " மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் " என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com